Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

WEDNESDAY, JANUARY 08 2025

புதன்கிழமை, 08 ஜனவரி 2025 | ஒளி: 10 கதிர் 132 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# யாழில் மீண்டும் முளைத்த சோதனைச் சாவடிகள்

நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணத்தில் நீண்டகாலமாக இருந்து, பின்னர் அகற்றப்பட்ட சோதனைச் சாவடிகள் மீண்டும் அமைக்கப்பட்டு வருகின்றமை பொதுமக்கள் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

யுத்தத்தின் போதும் யுத்தம் முடிவுற்ற பின்னரும் கூட பல்வேறு இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.






குறித்த சோதனைச் சாவடிகளை அகற்றுமாறு அரசியல் கட்சிகளும் பொதுமக்களும் நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்து வந்திருந்தனர்.

இந்த நிலையில், நாட்டில் புதிய ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட்டு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க யாழ்ப்பாணத்திற்கு வந்து சென்ற பின்னர் அங்கு இருந்த சோதனைச் சாவடிகள் அனைத்தும் உடனடியாக அகற்றப்பட்டன.

திடீரென அகற்றப்பட்ட அந்த சோதனைச் சாவடிகள் தற்போது மீண்டும் அதே இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

தொடர்ச்சி P2



# தைப்பொங்கலுக்கு விசேட ரயில் சேவை

தைப்பொங்கல் மற்றும் வார இறுதி விடுமுறையை முன்னிட்டு எதிர்வரும் 10ஆம் திகதி முதல் விசேட ரயில் சேவைகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு கோட்டை, பதுளை மற்றும் பதுளை, கோட்டை மற்றும் கோட்டை, காங்கேசந்துறைக்கு இடையில் இந்த விசேட புகையிரத சேவைகள் இடம்பெறவுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### தரமற்ற மருந்து பயன்பாட்டினால்

# பார்வை பாதித்த 17 பேருக்கு நஷ்டஈடு



நுவரெலியா வைத்தியசாலையில் தரமற்ற மருந்து பயன்பாட்டினால் கண் பார்வை பாதிப்புக்குள்ளான. 17 பேருக்கு நஷ்டஈடு வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (07) இடம்பெற்ற வாய்மூல விடை காண வினா நேரத்தின் போது எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில், மருந்து விநியோக கட்டமைப்பை வினைத் திறனாக்குவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தேசிய மருந்தக ஆராய்ச்சியகம் தொடர்பில் பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. மருந்து விநியோகம் தொடர்பில் கிடப்பில் இருந்த 2,100 கோப்புக்களில் 1,200 கோப்புக்கள் தொடர்பிலான விசாரணைகள் நிறைவு பெற்றுள்ளன.

தொடர்ச்சி P2

# “அர்ச்சுனா எம்.பி. தொடர்பில் ஆராய்வதற்கு குழு”



யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தொடர்பில் குழுவொன்றை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தெரிவித்தார்.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் பாராளுமன்றம் செவ்வாய்க்கிழமை(07) காலை 9.30 கூடியது இதன்போது சுயேச்சைக் குழு 17 இன் யாழ். மாவட்ட எம்.பியான இராமநாதன் அர்ச்சுனா முன்வைத்த ஒழுங்குப் பிரச்சினை,அது தொடர்பில் எதிர்க்கட்சி களின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக்க முன்வைத்த கருத்து தொடர்பில் பதிலளிக்கையிலேயே சபாநாயகர் இவ்வாறு தெரிவித்தார்.

சுயேச்சைக்குழு 17 இன் யாழ் மாவட்ட எம்.பி. யான இராமநாதன் அர்ச்சுனா ஒழுங்குப்பிரச்சினையை முன்வைத்து கூறுகையில், எனக்கு சபையில் உரையாற்ற நேரம் ஒதுக்கப்படுவதில்லை.

தொடர்ச்சி P2



# பதாகையால் பரபரப்பு

அ.அச்சுதன்

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட திருகோணமலை  மட்டக்களப்பு பிரதான வீதியின் வட்டவான் பகுதியில் திங்கட்கிழமை (06) மாலை தொல்லியல் திணைக்களத்தினால் நடப்பட்டுள்ள பதாகையால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

“1 KM வட்டவான் தொல்லியல் நிலையம்” என குறிப்பிட்டுக் குறித்த பதாகை நடப்பட்டுள்ளது. இதனால் அப்பகுதி மக்கள் மத்தியில் இது பெரும் பரபரப்பையும், விசனத்தையும் ஏற்பட்டுள்ளது. இது குறித்து தொல்லியல் திணைக்களத்தின் பதாகை எதிர்ப்பு தெரிவித்து மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

# “செனல் 4 வில் வெளியானதையும் கொண்டு விசாரணை ஆரம்பம்”

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாக ஏற்கெனவே முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணைகளுக்கு மேலதிகமாக செனல் 4 ஊடகத்தில் வெளியான தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (07) வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்

தொடர்ச்சி P2

# ஜப்பானிடமிருந்து இலங்கைக்கு தொடர்ச்சியாக உதவி



இலங்கைக்கு தொடர்ச்சியான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதாக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (JICA) சிரேஷ்ட உப தலைவர் ஹாரா சொஹெய் (Hara Shohei) தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் (JICA) சிரேஷ்ட உப தலைவர் ஹாரா சொஹெய் ஆகியோருக்கு இடையில் ஜனாதிபதி அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (07) நடைபெற்ற சந்திப்பின் போதே இந்த விடயம் கலந்துரையாடப்பட்டது.

ஜப்பான் உதவியில் முன்னெடுக்கப்படும் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய வளாக அபிவிருத்தி

தொடர்ச்சி P2

### புதிய அரசியல் கலாசாரத்துக்காக

# “அர்ப்பணிப்போடு செயல்படுவோம்”

கோஷங்களுக்கு சுருங்கிப்போகாது புதிய அரசியல் கலாசாரத்துக்காக அர்ப்பணிப்போடு செயல்படுவோம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்

2025ஆம் ஆண்டின் முதல் பாராளுமன்ற அமர்வு செவ்வாய்க்கிழமை (07) ஆரம்பமானது. அதன்போது உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



# “இலங்கையின் பிம்பத்தை உயர்த்துவது பொறுப்பாகும்”

சர்வதேச சமூகத்தின் முன் இலங்கையின் பிம்பத்தை உயர்த்துவது தூதுவரின் பொறுப்பு என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

### வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள்

# சான்றிதழ்களை இ-சேவையில் பெறலாம்

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மூலம் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்களின் ஒன்லைன் சான்றளிக்கப்பட்ட நகல்களைப் பெறுவதற்கு வெளிநாட்டு இலங்கையர்களுக்கு உதவும் நோக்கில் ஒரு முன்னோடித் திட்டத்தை அரசாங்கம் தொடங்கியுள்ளது.

வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு, பதிவாளர் நாயகம் திணைக்களத்துடன் இணைந்து இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

புதிய அமைப்பு இலங்கையின் பதிவாளர் நாயகம் திணைக்களத்தால் நிர்வகிக்கப்படும் இ-பிஎம்டி (மின்னணு பிறப்பு,

தொடர்ச்சி P2



# யாழில் மீண்டும் முளைத்த சோதனைச் சாவடிகள்

மாற்றம் என்று கூறி புதிதாக ஆட்சிக்கு வந்துள்ள அனுர அரசாங்கம் சோதனைச் சாவடிகளைத் தாமே அகற்றுவதும் மீண்டும் தாமே அமைக்கின்ற இந்த நடவடிக்கை தொடர்பில் பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை பொதுமக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகத்தையும் பெரும் அச்சத்தையும் ஏற்படுத்தி உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.









# தைப்பொங்கலுக்கு விசேட ரயில் சேவை

ஜனவரி 10, 12, 14, 17, 19, 24, 26 மற்றும் 31, பெப்ரவரி 2, 3 மற்றும் 4 ஆகிய திகதிகளில் சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என்று அதிகாரி கூறினார்.

# பார்வை பாதித்த 17 பேருக்கு நஷ்டஈடு



12 நோயாளர்களுக்கு 1,000,000 -ரூபாய் வீதம் இழப்பீடு செலுத்தல், 02 நோயாளர்களுக்கு 750,000 ரூபாயட வீதம் இழப்பீடு செலுத்தல்

ஒரு நோயாளிக்கு 700,000 ரூபாய் இழப்பீடு செலுத்தல் மற்றும் 02 நோயாளர்களுக்கு 250,000 ரூபாய் வீதம் இழப்பீடு செலுத்த அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

# "அர்ச்சுனா எம்.பி. தொடர்பில் ஆராய்வதற்கு குழு"



டிசெம்பர் 18ஆம் திகதி எனது சிறப்புரிமை மீறல் சம்பந்தமாகச் சபாநாயகரிடம் கூறியுள்ளேன். ஆனால் இன்று வரையில் அதற்குப் பதிலளிக்கப்படவில்லை. ஜனவரி 7ஆம் திகதியான இன்று வரையில் உரையாற்ற எனக்கு நேரம் ஒதுக்கப்படவில்லை. நான் பாராளுமன்றத்திற்கு வந்து பயனில்லை. யாழ்ப்பாணத்தில் இருந்து நான் வருகின்றேன். ஆனால் எனக்கு இதில் எந்த பயனும் இல்லை. இங்கு வந்து மேலே பார்த்துக்கொண்டிருந்துவிட்டு வீட்டுக்குப் போக முடியாது. எனவே எனக்குப் பதில் வழங்குங்கள்.

இதற்கு சபாநாயகர் பதிலளிக்கையில், இது தொடர்பான பதிலை வழங்குவதற்கான யோசனையை எதிர்க்கட்சித் தலைவருக்கு அனுப்பி வைத்துள்ளோம்.

இதன்போது, எழுந்த எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான கயந்த கருணாதிலக்க கூறுகையில், எதிர்க்கட்சி குழுவினரும் எதிர்க்கட்சித் தலைவரும் சபாநாயகரை சந்தித்து பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடும் போது இந்த விடயம் தொடர்பிலும் கலந்துரையாடினோம். இந்தப் பிரச்சினை தொடர்பில் நாங்கள் உங்களின் ஆலோசனைகளை எதிர்பார்க்கின்றோம். எழுத்து மூலமும் உங்களிடம் இது தொடரபில் குறிப்பிட்டுள்ளோம்.

இவ்வேளையில், மீண்டும் ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்து எழுந்த அர்ச்சுனா எம்.பி , பாராளுமன்றத்திற்குள் எனக்கு உரையாற்றுவதற்கே நேரம் எதிர்க்கட்சியினால் ஒதுக்கப்படவில்லை என்றால் எப்படி நாங்கள் ஒன்றாக நாட்டை கொண்டு செல்லப் போகின்றோம் என்று எதிர்பார்க்க முடியும் என கேள்வி எழுப்பினார்.

இதற்கு சபாநாயகர் பதிலளிக்கையில், எதிர்க்கட்சி பிரதம கொரடாவால் முன்வைக்கப்பட்ட விடயத்துக்கமைய நாங்கள் அர்ச்சுனா எம்.பி தொடர்பில் குழுவொன்றை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளோம். அந்தக் குழு அமைக்கப்பட்டு அதன் அறிக்கை வந்த பின்னர் நாங்கள் அடுத்தக் கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்றார்.

# "சனல் 4 வில்...

சம்பவம் தொடர்பாக முன்னெடுக்கப்படும் விசாரணைகள் தொடர்பில் ஆளும் கட்சி உறுப்பினர் ரவிந்திர பண்டாரவினால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இதனைக் கூறினார்.

அதன்போது அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பாகக் குற்றப்புலனாய்வு பிரிவு மற்றும் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கமைய சந்தேக நபர்கள் 747 பேர் கைது செய்யப்பட்டிருந்ததுடன், அவர்களில் நூறு பேருக்கு மேல் நீதிமன்றத்தில் 41 வழக்குகள் தொடரப்பட்டுள்ளதுடன் 14 குற்றப் பத்திரிகைகளும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இதேவேளை இது தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதேபோன்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் சனல் 4 ஊடகத்தில் வெளியான தகவல்களும் அதற்குப் புறம்பாக மேலதிக விசாரணைகளில் வெளியான தகவல்களை அடிப்படையாகக் கொண்டும் சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.


நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் இது தொடர்பான விசாரணைகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அந்த விசாரணைகளில் கடந்த நவம்பர் 11ஆம் கோட்டை நீதிமன்றத்தில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. 48 சாட்சியாளர்களிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. இதன்படி முறையான விசாரணைகள் நடைபெறுகின்றன என்றார்.

# ஜப்பானிடமிருந்து இலங்கைக்கு தொடர்ச்சியாக உதவி

தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது. ஜயிக்கா உதவியில் முன்னெடுக்கப்படும் அனைத்து வேலைத்திட்டங்களையும் விரைவில் நிறைவு செய்யத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடன் மறுசீரமைப்பு செயற்பாட்டிற்கு ஜப்பான் இலங்கைக்கு வழங்கிய உதவி மற்றும் எதிர்காலத்தில் இலங்கைக்குத் தேவையான நிதி உதவிகளை வழங்க ஜயிக்கா நிறுவனம் எதிர்பார்ப்பதாகவும் ஹாரா சொஹெய் மேலும் தெரிவித்தார்.

இந்நாட்டில் முன்னெடுக்கப்படும் முன்னணி வேலைத்திட்டமான "Clean Sri Lanka" திட்டத்திற்குப் பாராட்டு தெரிவித்த சிரேஷ்ட உப தலைவர், அந்த வேலைத்திட்டத்திற்கு அவசியமான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதாகவும் உறுதியளித்தார். இந்நாட்டின் போக்குவரத்து கட்டமைப்பு மறுசீரமைப்பு மற்றும் நகர தூய்மையாக்கல் பணிகளுக்கு ஜயிக்கா நிறுவனத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளக்கூடிய நிதி மற்றும் பௌதீக உதவிகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.



நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க மற்றும் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் இசோமதா அகியோ, ஜப்பான் தூதரகத்தின் முதன்மைச் செயலாளர் கென்ஜி ஒஹாஷி,ஜயிக்கா நிறுவனத்தின் இலங்கைக்கான முதன்மைப் பிரதிநிதி டெட்சுயா யமடா, சிரேஷ்ட பிரதிநிதி யூரி இடே உள்ளிட்ட ஜப்பான் பிரதிநிதிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# "அர்ப்பணிப்போடு செயல்படுவோம்"

மக்களின் இறையாண்மையைப் பாதுகாப்பதில், பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் கேந்திர ஸ்தானமாக, இந்த உயரிய பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பு தனித்துவமானதொன்றாகும். வெறும் கோஷங்களுக்கு சுருங்கிப் போகாது, புதிய அரசியல் கலாசாரத்தின் ஊடாக மக்களின் எதிர்பார்ப்புகளும் நம்பிக்கைகளும் நிறைவேற்றப்படும், மக்கள் சார் அரசியல் கலாசாரத்தை உருவாக்க பாராளுமன்றத்திலுள்ள அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்

மேலும், சபாநாயகர் தலைமையிலான அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், செயலாளர் நாயகம் தலைமையிலான அனைத்து பாராளுமன்ற ஊழியர்களுக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். அர்ப்பணிப்புடன் செயற்படக்கூடிய ஒரு வருடமாக அமைய வாழ்த்துகள் என்றார்.

# "இலங்கையின் பிம்பத்தை...

கடந்த காலங்களில் இராஜதந்திர சேவைகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் இலங்கையின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்திய சந்தர்ப்பங்கள் இருந்ததாகவும், புதிய நியமனங்களைப் பெற்ற இராஜதந்திரிகளிடம் இருந்து அவ்வாறானவற்றை எதிர்பார்க்கவில்லை எனவும் வெளிநாட்டு இராஜதந்திர சேவைக்கான புதிய இராஜதந்திரிகளை நியமிக்கும் நிகழ்வு ஜனாதிபதி அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை (07) இடம்பெற்றது. இங்கு உரையாற்றுகையிலே ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார். வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களுக்கு வழங்கப்படுகின்ற சேவை தொடர்பில் விசேட கவனம் செலுத்தி செயற்படுமாறும் அந்த நாடுகளில் உள்ள அனைத்து இலங்கையர்களுக்கும் சேவைகளை வழங்குவதற்கு முன்னின்று பாரபட்சமின்றி நியாயமாக செயற்படுமாறும் ஜனாதிபதி புதிய இராஜதந்திரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

இலங்கை பணியாளர்கள் தொழில் புரியும் மத்திய கிழக்கு, தென்கொரியா> ஜப்பான் போன்ற நாடுகளில் இராஜதந்திர சேவைகளை வழங்குவதில் அதிக கவனம் செலுத்துவது குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதற்கான வாய்ப்புகளை அதிகரிப்பதுடன் இலங்கையில் முதலீட்டாளர்களுக்கு புதிய சந்தை வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கும் பணியை இராஜதந்திர சேவையின் ஊடாக மேற்கொள்ள முடியும் என ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்த வெளிநாட்டு நேரடி முதலீடுகளை கொண்டு வருவது தூதுவருக்கு வழங்கப்பட்டுள்ள பாரிய பொறுப்பு எனவும், அதற்குத் தேவையான ஆதரவை வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார். வெளிநாட்டு இராஜதந்திர சேவைக்கென ஜனாதிபதி 04 தூதுவர்களையும் உயர்ஸ்தானிகர் ஒருவரையும் நியமித்தார். இராஜதந்திர சேவையில் 20 வருடங்களுக்கு மேலாக அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் இவ்வாறு இராஜதந்திர சேவைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். கத்தார் நாட்டின் தூதுவராக - ஆர்.எஸ்.கான் அசாத்,ரஷ்ய தூதுவராக - எஸ்.கே.குணசேகர, குவைத் தூதுவராக - எல்.பி.ரத்நாயக்க, எகிப்திய தூதுவராக - ஏ.எஸ்.கே.செனவிரத்ன,

நியூசிலாந்து உயர்ஸ்தானிகராக - டபிள்யு.ஜீ.எஸ்.பிரசன்ன ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# சான்றிதழ்களை இ-சேவையில்...

திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்) தரவுத்தளத்திற்கான இலங்கையின் இராஜதந்திர பணிகளுக்கு அணுகலை வழங்குகிறது.

ஆரம்ப வைபவம் செவ்வாய்க்கிழமை(07) மெய் நிகராக நடைபெற்றது. வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர, அமைச்சின் செயலாளர் அருணி ரணராஜா, பதிவாளர் நாயகம் டபிள்யூ. ஆர்.ஏ.என்.எஸ்.விஜயசிங்க மற்றும் ஜனாதிபதி செயலகம், பதிவாளர் நாயகம் திணைக்களம் மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

முதற்கட்டமாக, டோக்கியோ (ஜப்பான்), குவைத், தோஹா (கத்தார்), மிலன் (இத்தாலி), டொராண்டோ (கனடா), மெல்போர்ன் (ஆஸ்திரேலியா) மற்றும் துபாய் (யுஏஇ) ஆகிய நாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் மற்றும் துணைத் தூதரகங்கள் மூலம் இந்த முன்னோடித் திட்டம் செயல்படுத்தப்படும். அமைச்சும் பதிவாளர் நாயகம் திணைக்களமும் இலங்கை புலம்பெயர்ந்தோருக்கு மிகவும் திறமையான தூதரக சேவைகளை உறுதிப்படுத்தும் வகையில், உலகெங்கிலும் உள்ள ஏனைய இலங்கை தூதரகங்களுக்கும் சேவையை அவ்வப்போது விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளன.

பல்வேறு உத்தியோகபூர்வ நோக்கங்களுக்காகப் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட நகல்கள் தேவைப்படுகின்றன. இந்த புதிய முறையானது வெளிநாட்டு இலங்கையர்களுக்கு இந்த ஆவணங்களை நேரடியாக வெளிநாட்டில் உள்ள தங்களின் தூதரகங்களில் இருந்து பெற்றுக் கொள்ள அனுமதிக்கிறது, இலங்கையில் உள்ள அவர்களின் பிரதிநிதிகள் அவர்கள் சார்பாகப் பதிவாளர் நாயகத்தின் அலுவலகத்திலிருந்து ஆவணங்களைக் கோருவதற்கான தேவையை நீக்குகிறது.

விண்ணப்பித்தவுடன், அங்கீகரிக்கப்பட்ட இலங்கைத் தூதரகங்கள் e-BMD தரவுத்தளத்திலிருந்து தேவையான சான்றிதழ்களை மீட்டெடுப்பதன் மூலம் சான்றளிக்கப்பட்ட நகல்களை வழங்கும்.

இந்தத் திட்டம் இலங்கையின் டிஜிட்டல் மயமாக்கல் முயற்சிகளில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் என்று மெய் நிகர் அறிமுகத்தைத் தொடர்ந்து அமைச்சர் ஹேரத் கூறினார்.

இவ்வாறான முன்முயற்சிகள் வெளிநாடுகளில் உள்ள இலங்கை சமூகத்தினருக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று கூறிய அவர், இரண்டு மாதங்களில் வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த திட்டம், பொதுச் சேவைகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கான அரசாங்கத்தின் வலுவான அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது என்று குறிப்பிட்டார்.

முன்னோடித் திட்டம் செயலில் உள்ள நாடுகளில் உள்ள இலங்கை வெளிநாட்டவர்கள் இப்போது பிறப்பு, திருமணம் மற்றும் இறப்பு சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட நகல்களுக்கு அந்தந்த பணிகள் மற்றும் பதவிகளில் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பித்து விண்ணப்பிக்கலாம்.

# புத்தாக்க திட்டம்

சுதந்திரத்தின் 76 ஆண்டுகளுக்குப் பிறகு, ஓரிரு துறைகளின் மாற்றத்திற்கு அப்பாற்பட்ட ஒட்டுமொத்த சமூக மாற்றமே இன்று எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது ஒரு மறுமலர்ச்சி யுகம் இன்று அவசியம். சுதந்திரத்தின் போது பொறியியல், சுகாதாரம், கல்வி, கலை, இலக்கியம், மனித உரிமைகள் என பல்வேறு துறைகளில் தலைசிறந்தவர்களை உருவாக்க எதிர்பார்க்கப்பட்டது. அதற்காக ஒவ்வொரு துறையிலும் அத்திவாரம் இடுவதற்கு முயற்சி நடைபெற்ற போதும், கடந்த ஆட்சியாளர்களால் அந்த முயற்சிகள் நசுக்கப்பட்டன. இருபதாம் நூற்றாண்டில் உதயமான ஆனால் நசுக்கப்பட்ட அபிவிருத்தியடைந்த இலங்கைக்கான கனவு இந்த இருபத்தோராம் நூற்றாண்டில் நனவாகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. தேசிய மக்கள் சக்தியின் மறுமலர்ச்சி ஆட்சி அதற்கான வாய்ப்பைத் தரும். பாரிய கூட்டு மக்கள் செயற்பாட்டின் ஊடாக இந்தச் செயற்பாடு கட்டியெழுப்பப்படுகிறது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (Research and Development) செயல்முறை, பெறுமதி சேர் பொருட்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தி நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்கும். நாட்டின் மொத்தத் தேசிய உற்பத்தியில் 0.12 வீதமே இந்தத் துறைக்கு ஒதுக்கப்படுகிறது. ஆனால் மலேசியா 1%, தாய்லாந்து 1.2% மற்றும் வியட்நாம் 0.42% இதற்காக செலவிடுகின்றன.

தென்கொரியா 4.6%, ஜப்பான் 3.6%, அமெரிக்கா 3.5% மற்றும் சீனா 3% ஒதுக்கி வேகமாக வளர்ந்த நாடுகளாக மாறியுள்ளன. இலங்கையில் வரையறுக்கப்பட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டாலும், இலங்கையின் வளர்ச்சிக்கு சரியான பங்களிப்பு இதன் ஊடாகக் கிடைக்கவில்லை. தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள், நிலவளங்கள், நாட்டைச் சுற்றியுள்ள கடல் மற்றும் நாட்டிற்குள் ஏராளமாக இருக்கும் நன்னீர் வளங்கள், சீரான மண் மற்றும் வெப்பமண்டல காலநிலை, ஆண்டு முழுவதும் சூரிய ஆற்றல், காற்றாலை ஆற்றல், ஆறுகள் மற்றும் ஏரிகள் என ஏராளமான இயற்கை வளங்கள் நம் நாட்டில் காணப்படுகின்றன.

இவை அனைத்தும் குறைந்த செலவில் அதிக இலாபம் தருகின்ற பெறுமதி சேர் பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்யக் கூடியவையாகும். இவற்றுக்கு சர்வதேச சந்தையில் மிகப்பெரிய சந்தை வாய்ப்பு உள்ளது.

நாட்டில், கிராம அளவில் புதிய கண்டுபிடிப்பாளர்கள் தோன்றினாலும், அவர்களின் யோசனைகள் மற்றும் தயாரிப்புகளை சரியான முறையில் உள்வாங்குவதற்கு அவர்களுக்குத் தேவையான உள்கட்டமைப்புகள் குறைந்த அளவிலே கிடைத்தன. இந்த மனித வளத்தை சிந்திக்கத் தேவையான சூழலை உருவாக்கி, ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளில் திறமையான பொறிமுறையின் மூலம் அவர்களின் புதிய யோசனைகளை வழங்குவதன் மூலம் எதிர்காலத்தில் இலங்கையை ஒரு புத்தாக்க மையமாக மாற்ற முடியும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு மக்களின் முழு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. மறுமலர்ச்சி யுகத்தை ஏற்படுத்தும் முன்னெடுப்பில் உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்குவது பிரதானமானதாகும். ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க பாராளுமன்றத்தில் வெளியிட்ட கொள்கைப் பிரகடன அறிவிப்பில் இலங்கையின் மனித மற்றும் சமூக அபிவிருத்திக்கு ஆதரவளிப்பது குறித்தும், இலங்கையின் வளர்ச்சியை அதிகரிப்பது குறித்தும் பிரதானமாக கருத்து வெளியிடப்பட்டது. சுற்றாடல் முகாமைத்துவம் ஊடாக உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்கும் எண்ணக்கரு மற்றும் பெறுமதி சேர் பொருட்கள் சேவைகள் உற்பத்தி தொடர்பிலும் அவர் எடுத்துரைத்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அநுர குமார திசாநாயக்க அமெரிக்கா சென்றிருந்தார். பேராசிரியர் கோமிகா உடுகமசூரியவின் அழைப்பின் பேரில் ஆண்டர்சன் புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அவர் சென்று அதனைப் பார்வையிட்டார். இந்த விஜயம் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்துறை சார் கொள்கை தயாரிக்க பெரிதும் பங்களித்தது. கட்சியின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கும் பொறுப்பு பேராசிரியர் கோமிக உடுகமசூரியவுக்கு வழங்கப்பட்டது.

'Quantum Leaf' எனும் தலைப்பில் திசைகாட்டியின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கொள்கை அறிக்கை கடந்த தேர்தலுக்கு முன்னர் வெளியிடப்பட்டது. அந்தக் கொள்கை அறிக்கையின் அடிப்படையில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பக் கொள்கையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்தச் செயற்பாட்டை வலுப்படுத்தும் செயல்முறை ஜனாதிபதியால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, புதிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு உருவாக்கப்பட்டது.

இதுவரை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.12% இற்கும் குறைவாகவே விஞ்ஞான தொழில்நுட்பத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பெறுமதியான பல ஆய்வுகள் நிறைவடைந்துள்ள போதிலும், அவை பொருளாதார நலன்களுக்காக இன்னும் பயன்படுத்தப்படவில்லை. புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்துள்ள நியில், பெருமளவிலான உள்ளூர் மற்றும் சர்வதேச முதலீட்டாளர்கள் தற்போது இலங்கையில் முதலீடு செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இவை அனைத்தையும் காலதாமதமின்றி நிர்வகித்து நாட்டின் வளர்ச்சிக்கு பயன்படுத்தி பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும். நன்கு திட்டமிடப்பட்ட மற்றும் முறையாக நிர்வகிக்கப்படும் நீண்ட கால ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பொறிமுறைகளை முன்னெடுக்கும் பணிகள் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் கலாநிதி கிரிஷாந்த அபேசேனவின் பணிப்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும், அரச கொள்கைகளை உருவாக்குவதற்கும், ஆய்வுடன் தொடர்புடைய சட்டங்களை நிறைவேற்றுவதற்கும் நீண்ட காலம் பிடிக்கும். பொருளாதாரத்திற்கு உடனடி ஊக்கத்தைப் பெற, ஏற்கெனவே ஆராய்ச்சியை முடித்த அல்லது முடிவடையும் தறுவாயில் உள்ள திட்டங்களை, பெறுமதி சேர்த்து சந்தைப்படுத்த வேண்டியுள்ளது. இதற்கென National Initiative for R&D Commercialization (NIRDC) என்ற பெயரில் புதிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் இணைத் தலைவர்களாக ஜனாதிபதி செயலாளரும் பேராசிரியர் கோமிக உடுகமசூரியவும் உள்ளனர். பல நிபுணர்கள் இதில் அங்கம் வகிக்கின்றனர்.

## பாராளுமன்ற உத்தியோகத்தர்களின்

# "விடுமுறை கொடுப்பனவை வழங்கவும்"



பாராளுமன்ற உத்தியோகத்தர்களின் விடுமுறைக் கொடுப்பனவை அவர்களுக்கு பெற்றுக்கொடுக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்தார்.

2025ஆம் ஆண்டின் முதல் பாராளுமன்ற அமர்வு செவ்வாய்க்கிழமை(07) ஆரம்பமானது. இதன்போது உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பாராளுமன்றத்தின் பணியைத் திறம்பட உறுதிப்படுத்தச் சகல துறைகளிலும் அர்ப்பணிப்புள்ள நல்ல பணிக்குழாம் இங்கு காணப்படுகிறது. ஜோசப் மைக்கல் பெரேரா காலத்திலிருந்து அவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த விடுமுறை கொடுப்பனவுத் திட்டத்தை அவ்வாறே நடைமுறைப்படுத்துவதற்கு ஊழியர் ஆலோசனைக் குழுவில் அனுமதியைப் பெற்றுக் கொண்டோம். அந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கான அதிகாரம் சபாநாயகருக்கு காணப்படுகிறது.

சமீபகாலமாகப் பாராளுமன்ற அதிகாரிகள் சார்பில் நல்ல பல தீர்மானங்களை எடுத்தீர்கள். அதற்கு நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். இந்த முற்போக்கான பயணத்தில் முன் சென்று ஊழியர் ஆலோசனைக் குழுவில் அன்று நாம் எடுத்த தீர்மானத்தை, அதாவது 21 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைமுறையில் உள்ள விடுமுறைக் கொடுப்பனவுத் திட்டத்தைப் புத்தாண்டு முதல் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்தார்.

# வாகன விபத்தில் ஒருவர் பலி

■ எம்.யூ.எம்.சனூன்




புத்தளம் - அனுராதபுரம் பிரதான வீதியின் சிறாம்பியடி பகுதியில் திங்கட்கிழமை (06) பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியாகியுள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயங்களுக்கு ள்ளாகியதாக புத்தளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸுடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதி குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் உயிரிழந்தவர் புத்தளம் கருவலகஸ்வெவ 8ஆம் கட்டை பகுதியைச் சேர்ந்தவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் சிக்கிய மற்றுமொருவர் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகவும் அவரது நிலைமை கவலைக்கிடமாகக் காணப்படுவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்தவரின் சடலம் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பில் பஸ்ஸின் சாரதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளனர்.

# திருப்பி அனுப்பப்பட்ட 4 விமானங்கள்

■ டி.கே.ஜி.கபில

கட்டுநாயக்க விமான நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் செவ்வாய்க்கிழமை (07) தரையிறங்க வந்த 04 விமானங்கள், அடர்ந்த கடும் பனிமூட்டம் காரணமாக கட்டுநாயக்க விமான நிலைய ஓடுபாதையை சரியாகப் பார்க்க முடியாததால் மத்தள மற்றும் திருவனந்தபுரம் விமான நிலையங்களுக்கு விமானங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

அதன்படி, துபாயிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் UL-226 காலை 05.00 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்க, சீனாவின் Guangzhou இல் இருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் UL-881 மற்றும் இந்தியாவின் பெங்களூரிலிருந்து 05.05 க்கு வந்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ். UL-174 ரக 03 விமானங்களை மத்தள விமான நிலையத்திற்குத் திருப்பி அனுப்பப்பட்டன.

மேலும், துருக்கியின் இஸ்தான்புல்லில் இருந்து காலை 06.00 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த துருக்கிய எயார்லைன்ஸ் விமானம் TK-730, இந்தியாவின் திருவனந்தபுரம் விமான நிலையத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டது.

மத்தள விமான நிலையத்திற்கு அனுப்பப்பட்ட இலங்கை விமானங்களுக்கு எரிபொருள் வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த விமானங்களிலிருந்த பயணிகள் இறக்கி விடப்படவில்லை.

வேறு விமான நிலையங்களுக்குத் திருப்பி விடப்பட்ட அனைத்து விமானங்களும் காலை 09:00 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்திற்குத் திரும்பின.

அத்துடன், கட்டுநாயக்க விமான நிலையத்தைச் சூழவுள்ள பிரதேசத்தில் நிலவிய அடர்ந்த பனிமூட்டம் காலை 07.00 மணியளவில் படிப்படியாக மறைந்ததையடுத்து, கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த அனைத்து விமானங்களும், திரும்பிச் செல்லாமல், கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்க நடவடிக்கை எடுக்கப்பட்டன.





# சுற்றுலாப் பயணிகளை கவர சுத்தம் செய்தல்

■ வ.சக்தி

கிழக்கு மாகாண ஆளுநரின் உத்தரவின் பெயரில் மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாத் துறையை வினைத்திறன் உடையதாக முன்னெடுக்கும் செயல் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு நகருக்கு வரும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நோக்குடன் மாநகரத்தை அழகுபடுத்தும் பணிகள் செவ்வாய்க்கிழமை(07) அன்று மட்டக்களப்பு மாநகர சபையின் புதிய ஆணையாளர் எஸ். தனஜெயன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏற்பட்ட பெரு வெள்ளப்பெருக்கினால் வாவி பெருக்கெடுத்ததன் காரணமாக மட்டக்களப்பு கொழும்பு பிரதான வீதியை அண்டிய பகுதிகள் பிளாஸ்டிக் கழிவுகளால் நிரம்பிக் காணப்பட்டன.

இதனால் சுற்றாடல் அசுத்தமாக்கப்பட்டதுடன், இதனை அண்டிய பகுதிகளில் உள்ள நீர் நிலைகளில் உயிர் வாழும் மீன் இனங்கள் பாதிக்கப்பட்டதுடன், கால்நடைகளும், அவற்றை உண்பதால் அவைகளும் மேலும் பாதிப்படைந்தன

இதனைக் கருத்தில் கொண்டு மட்டக்களப்பு மாநகர சபையினால் நகரைச் சுத்தப்படுத்தும் பாரிய சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டதுடன் இதில் மாநகர சபையின் ஊழியர்கள் சுகாதார தரப்பினர் கலந்து கொண்டிருந்தனர்.

# மணிமேகலை பிரசுரத்தின் நூல்கள் வெளியீட்டு விழா

48ஆவது சென்னை புத்தகக் காட்சி சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதன்போது மணிமேகலை பிரசுரம் 48 நூல்களை வெளியிட்டு வைத்தது. இந்த நிகழ்வில் நீதிபதி ஸ்ரீமதி, ஐ.பி.எஸ். அதிகாரி சிவகுமார் மற்றும் புதிய வானம் மக்கள் நல அறக்கட்டளையின் சர்வதேச அமைப்பாளரும் தென்னிந்திய ஊடகவியலாளருமான காஞ்சிபுரம் தியாகராஜன், சென்னை தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர் திருமதி ஜெய்ஸ்ரீ சுந்தர், எழுத்தாளர் மற்றும் பத்திரிகையாளர் தமிழ்வாணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தார்கள்.

# அறிவோர் ஒன்றுகூடல்

தகவல் தொழில்நுட்பவியலாளர் மு.மயூரன் தலைமையில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் புதன்கிழமை (08) மாலை 5.30 மணிக்கு நடைபெறவிருக்கும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் "கலந்து அன்பாகிக் கசிந்து உள் உருகும் களம்" எனும் தலைப்பில் கொழும்புத் தமிழ்ச் சங்க ஆயுள் உறுப்பினர் ஆ.சடாகோபன் உரையாற்றவுள்ளார்.

# மக்கள் சந்திப்பு

■ ஏ.எச்.ஹஸ்பர்

திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசனின் மக்கள் சந்திப்பு திங்கட்கிழமை (06) நடைபெற்றது.

இச் சந்திப்பில் திருகோணமலை மாவட்டத்தில் பரவலாகக் காணப்படும் கல்வி , சுகாதாரம், மருத்துவம், சுய தொழில், அபிவிருத்தி முதலிய சிக்கல்களை மக்கள் தெரிவித்தனர். மக்களது சிக்கல்களைக் கேட்டறிந்த அமைச்சர், உரிய நிறுவனங்களிடம் இருந்து மக்களுக்கு சிக்கல்களைத் தீர்க்கும் வழியினை செய்து தருவதாக உறுதியளித்தார்.குறித்த பொது மக்கள் சந்திப்பானது ஒவ்வொரு மாதமும் பாராளுமன்ற அமர்வு தினங்கள் தவிர்ந்த தினங்களில் குறித்த திகதிகளில் இடம் பெறும் என தெரிவிக்கப்படுகிறது.



# பயணிகளுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்த வேண்டாம்

'தூய்மையான இலங்கை' திட்டத்திற்கு அமைவாக, வீதி விபத்துகளைக் குறைத்தல் மற்றும் நெரிசலைக் குறைக்கும் நோக்கில் இலங்கை பொலிஸ் திணைக்களம் இரண்டு போக்குவரத்து முயற்சிகளை ஆரம்பித்து, நடைமுறைப்படுத்தி வருகிறது. அதை வரவேற்கும் அதே நேரத்தில், பொது போக்குவரத்தில் பயணிக்கும் பயணிகளுக்கு அசௌகரியம் ஏற்படாத வகையில் நடந்துகொள்ளவேண்டும்.

மாற்றப்பட்ட ஹோரன் ஒலிகள், பல்வேறு வண்ணங்களின் ஒளிரும் விளக்குகள், சட்ட விரோதமான மாற்றங்கள், உரத்த ஹார்ன்கள், சத்தமில்லாத சைலன்சர்கள் மற்றும் விபத்து அபாயத்தை அதிகரிக்கும் கூடுதல் பாகங்கள் கொண்ட வாகனங்களைக் குறிவைத்து முதலாவது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்து பேருந்து ஓட்டுநர்களால் போக்குவரத்து விதிமீறல்களைக் கண்டறிந்து அதற்கேற்ப சட்டத்தை அமுல்படுத்துவதற்கு சிவில் உடையில் அதிகாரிகளை நியமிப்பது இரண்டாவது முயற்சிக்குள் அடங்குகிறது.

சாரதிகள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் ஜனவரி 4ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த நடவடிக்கைகள் 19 வரை ஒரு முன்னோடித் திட்டமாக நடத்தப்படுகிறது.

முதல் செயல்பாட்டின் போது, அதிகாரிகள் முதன்மையாகச் சாரதிகளுக்குக் கற்பித்தல், எச்சரிக்கைகளை வழங்குதல் மற்றும் அவர்களின் வாகனங்களில் ஏதேனும் அங்கீகரிக்கப்படாத மாற்றங்களை அகற்ற அறிவுறுத்தல் ஆகியவற்றில் கவனம் செலுத்துவார்கள்.

நமது நாட்டில் கடந்த சில வருடங்களில் ஏற்பட்ட வீதி விபத்துகளால், பல உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன. அவற்றை முற்றாக இல்லாதொழிக்க வேண்டுமாயின், மேலே கூறப்பட்டவை கட்டாயம் அமுல்படுத்தப்பட வேண்டும். அவை முன்னெடுக்கப்படுகின்றன. எனினும், பொது போக்குவரத்து சேவையைச் சோதனைக்கு உட்படுத்தும் போது, பஸ்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இடங்களில் சோதிக்கவேண்டும்.

சாலை விபத்துகளைத் திரும்பிப் பார்த்தால், நம் நாட்டில் நேர்மையற்ற வாகன ஓட்டிகளும், வீதி ஒழுக்கமின்மையுமே இத்தனை பேரழிவுகளுக்குக் காரணம் என்று தோன்றுகிறது. பயணிகள் பேருந்து சேவை, குறிப்பாக தனியார் பேருந்துகள் முழுவதுமாக குளறுபடியாகிவிட்ட நிலையில், பேருந்து சேவையானது தற்போது முழுக்க முழுக்க பயிற்சியற்ற, ஒழுக்கம் இல்லாத குழுவினரின் கைகளில் இருப்பதைக் காண்கிறோம்.

பஸ்ஸைக் கண்டால் மற்ற வாகன ஓட்டிகள் மற்றும் பாதசாரிகள் பயமுறுத்தும் அளவுக்கு இன்று பஸ் சேவையானது எந்தவித நேரடித் தன்மையும், தனியுரிமையும் இல்லாத கொடிய ஆபத்தான சேவையாக மாறியுள்ளது. எனவே, இலங்கையில் உடனடியாக பயணிகள் பேருந்து சேவையை ஒழுங்குபடுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

உண்மையில் வீதி விபத்துக்கள் ஏற்படுவதும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகளும் இந்த நாட்டிற்கு பெரும் சோகம். பேருந்துகள், முச்சக்கரவண்டிகள், மணல் டிப்பர்கள், மோட்டார் சைக்கிள்கள் என அனைத்துத் துறைகளிலிருந்தும் சாலைகளில் விபத்துக்குள்ளாகி, பலரும் சிக்கி உயிரிழக்கின்றனர். மிருகங்களும் உயிரிழக்கின்றன.

போக்குவரத்து விதிகளை மீறுதல், குடிபோதையில் வாகனம் ஓட்டுதல், அதிக வேகம், பாதுகாப்பற்ற வாகனம் ஓட்டுதல், தகுதியற்ற வாகனம் ஓட்டுதல் அல்லது சாலை ஒழுங்குமுறை மீறுவோர் தொடர்பில் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# எதிர்க் கட்சிகள் அழிவை நோக்கிச் செல்கின்றனவா?



எம்எஸ்.எம்.ஐயூப்

ஆளும் தேசிய மக்கள் சக்தியும் பிரதான எதிர்க் கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி மற்றும் இலங்கை தமிழ் அரசு கட்சி ஆகியவையும் தற்போது பெரும் நெருக்கடியைச் சந்தித்துள்ளதைக் காண முடிகிறது.

கடந்த செப்டெம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நவம்பர் மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் மூலம் முற்றாக ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்ட தேசிய மக்கள் சக்தி ஊழல் மலிந்த நிர்வாக இயந்திரத்துடன் வங்குரோத்து அடைந்த நாட்டையே கையேற்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றதன் காரணமாகக் கடந்த டிசெம்பர் மாத இறுதியில் நாடு வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டதாக சில நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஆனால், ஊழல் மலிந்த அரச இயந்திரத்தினூடாக தமது திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதில் அரசாங்கம் இப்போது பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இரண்டு அமைச்சர்கள் இதனை வெளிப்படையாகவே கூறியதாக நாம் கடந்த வாரம் குறிப்பிட்டு இருந்தோம். ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவும் கட்டுநாயக்க விமான நிலையத்தை மையமாகக் கொண்டு இடம்பெறும் ஊழல்களைப் பற்றிக் கடந்த வாரம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி இருந்தார்.

கடந்த திங்கட்கிழமையும் ஜனாதிபதி இந்த விடயத்தைப் பற்றி சட்ட மா அதிபர் மற்றும் அவரது திணைக்களத்தின் அதிகாரிகளுடன் கலந்துரையாடி இருந்தார். சுற்றுப் புறச் சூழலைச் சுத்தமாக வைத்திருப்பதற்காகவும் மக்களை நல்ல பண்பாடு உள்ளவர்களாகப் பயிற்றுவிப்பதற்காகவும் நாட்டில் ஊழலைக் கட்டுப்படுத்துவதற்காகவும் ஜனவரி முதலாம் திகதி ஜனாதிபதி கிளீன் ஸ்ரீலங்கா என்ற பெயரில் திட்டம் ஒன்றை ஆரம்பித்தார்.

விந்தை என்னவென்றால் அதனையும் ஊழலில் பழக்கப்பட்ட அதிகாரிகள் மற்றும் அரச ஊழியர்கள் மூலமாகவே செயற்படுத்த வேண்டியுள்ளது.

இது தான் ஆளும் கட்சி எதிர்நோக்கியிருக்கும் பாரிய சவாலாகும். ஆனால் எதிர்க்கட்சிகள் தமது இருப்பை பாதுகாத்துக் கொள்ளும் கடுமையான சவாலை எதிர்நோக்கியுள்ளன.

அந்தச் சவால் சில கட்சிகளுக்கு எந்தளவு பாரதூரமானது என்றால் சிலவேளை அக்கட்சிகள் எதிர் வரும் உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபை தேர்தல்களுக்குப் பின்னர் காணாமற் போகும் அபாயமும் இருக்கிறது.

ஏற்கெனவே இந்தக் கட்சிகள் பலமிழந்து மிக மோசமான நிலையிலேயே இருக்கின்றன.

பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி ஜனாதிபதித் தேர்தலில் பெற்ற 43 இலட்சம் வாக்குகளைப் பார்க்கிலும் குறைந்த வாக்குகளையே அதாவது, சுமார் 20 இலட்சம் வாக்குகளையே (மொத்த வாக்குகளில் 17 வீதம்) பொதுத் தேர்தலில் பெற்றது.

225 உறுப்பினர்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் அக்கட்சிக்கு வெறும் 40 உறுப்பினர்களே இருக்கின்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் அக்கட்சிக்கு வாக்களித்த வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் பொதுத் தேர்தலின் போது, அக்கட்சிக்கு வாக்களிக்காமை இதற்கு முக்கிய காரணமாகும்.

இப்போது, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்கு முன்னணி என்ற பெயரில் இயங்கும் மலையக தமிழ் கட்சிகளும் எதிர் வரும் உள்ளூராட்சிமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சக்தியைக் கைவிட்டுத் தனித்துப் போட்டியிடத் தயாராவதாகச் செய்திகள் கூறுகின்றன.

எனவே, அத்தேர்தல்களின் போது நாட்டில் சுமார் ஒரு கோடியே எழுபது இலட்சத்துக்கு அதிகமான மொத்த வாக்குகளில் ஐக்கிய மக்கள் சக்தி சிலவேளை, சுமார் 15 முதல் 17 இலட்சம் வாக்குகளைப் பெறலாம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலின் போது தமக்கு 30 கட்சிகள் ஆதரவளிக்கின்றன, 40 கட்சிகள் ஆதரவளிக்கின்றன என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர்கள் பெருமையுடன் பேசினர்.

ஆனால், அவை கொள்கைப் பிடிப்பினால் ஒன்று சேரவில்லையென்றும் தொகுதி அமைப்பாளர் பதவிகள், தேசிய பட்டியல் ஆசனங்கள் போன்றவற்றை எதிர்பார்த்தே சேருகின்றன என்றும் நாம் இந்தப் பத்தியின் மூலம் சுட்டிக் காட்டினோம்.

தேர்தலின் பின்னர் ஐக்கிய மக்கள் சக்திக்கு தம்மோடு இணைந்த சகல கட்சிகளுக்கும் அவ்வாறு பிரதி உபகாரம் செய்ய முடியாது என்பதையும் அதனால் பிரச்சினைகள் உருவாகும் என்றும் நாம் சுட்டிக் காட்டினோம். இப்போது அதுவும் நடந்துள்ளது.

முன்னர் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் கீழ் இயங்கி பின்னர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணியில் இணைந்திருந்தவர்களும் தனித்துப் போட்டியிடப் போவதாகச் செய்திகள் கூறுகின்றன.

சிலர் சந்திரிகா குமாரதுங்கவின் தலைமையில் இயங்கிய பழைய பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு உயிரூட்டி அதன் கதிரை சின்னத்தின் கீழ் எதிர்வரும் உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்களில் போட்டியிடப் போகிறார்கள்.

கடந்த பொதுத் தேர்தலின் போது, வெறும் ஐந்து இலட்சம் வாக்குகளைப் பெற்ற புதிய ஜனநாயக முன்னணியின் எதிர் காலத்தை அதன் பிரகாரம் ஊகித்துக்கொள்ள வேண்டியுள்ளது.

கடந்த தேர்தல்களின் போது, அரசியல் நாகரிகமே தேசிய மக்கள் சக்தியின் பிரதான துருப்புச் சீட்டாகியது.

இதன்படி, தாம் பொதுச் சொத்தை கொள்ளையடிக்கவுமில்லை, கொள்ளையடிக்கப் போவதுமில்லை என்றும் ஏனைய கட்சிகள் பொதுச் சொத்தை கொள்ளையடித்தன, இனியும் கொள்ளையடிக்கவே போகின்றன என்றும் அக்கட்சி அடித்துக் கூறியது.

எதிர் காலம் எவ்வாறு அமையப் போகிறது என்பது தெளிவில்லா விட்டாலும் கடந்த காலத்தைப் பற்றி தேசிய மக்கள் சக்தி கூறுவது உண்மையென்பதை மக்கள் ஏற்றுக் கொண்டனர்.

ஒரு புறம் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் அப்பதவிகளுக்கான தமது சம்பளத்தையேனும் தனிப்பட்ட ரீதியில் அனுபவிக்கவில்லை.

அவர்கள் அச்சம்பளத்தைக் கட்சியின் பொது நிதியில் சேர்த்து அதில் ஒரு பகுதியை மட்டும் தமது செலவுக்காகப் பெற்றுக் கொண்டனர். மிகுதியை அக்கட்சி இன, மத, கட்சி பேதமின்றி மக்கள் நலனுக்காக செலவழித்தது.

தேசிய மக்கள் சக்தியின் மைய அமைப்பான மக்கள் விடுதலை முன்னிணியன் பல உறுப்பினர்கள் நல்ல வருமானத்தைக் கொண்ட வசதியான தொழில்களைக் கைவிட்டு கட்சியின் முழுநேர ஊழியராக மாறியுள்ளனர்.

தற்போதைய சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மருத்துவர் நலிந்த ஜயதிஸ்ஸவும் அவ்வாறான ஒருவராவார். கடந்த பொதுத் தேர்தலில் தெரிவான தேசிய மக்கள் சக்தியின் 159 பாராளுமன்ற உறுப்பினர்களும் அப்பதவிகளுக்கான தமது சம்பளத்தைக் கட்சி நிதியத்துக்கு அன்பளிப்பு செய்ய உடன்பட்டுள்ளதாக அண்மையில் செய்திகள் கூறின.

ஆனால், ஏனைய கட்சிகளின் உறுப்பினர்கள் தமது சம்பளத்தை அன்பளிப்புச் செய்வது ஒரு புறமிருக்கத் தேசிய மக்கள் சக்தியினதும் மக்கள் விடுதலை முன்னணியினதும் இந்த தாராள மனப்பான்மையையும் ஏளனம் செய்கின்றனர்.

தமது பதவியைப் பாவித்து கோடிக் கணக்கு ரூபாய் பெறுமதியான வசதிகளையும் சிறப்புரிமைகளையும் பெற்றுக்கொண்டனர். முன்னர் மக்கள் இருசாராரிடையிலான இந்த வேறுபாட்டை பொருட்படுத்தாவிட்டாலும் 2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடி மக்களை வதைக்கும் போது மக்கள் அவ்வேறுபாட்டை மிகப் பாரதூரமாகக் கருத்திற்கொண்டனர்.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வெறும் 3 வீத வாக்குகளைப் பெற்ற தேசிய மக்கள் சக்தியை அவர்கள் அரியணையில் தூக்கி வைத்ததற்குப் பிரதான காரணம் அதுவாகும்.

எனவே, கடந்த தேர்தல்களின் போது தற்போதைய எதிர்க்கட்சிகள் அரசியல் நாகரிகம் என்ற விடயத்தில் தேசிய மக்கள் சக்திக்குத் தோல்வியடைந்தன. போலி மருந்துகளை இறக்குமதி செய்து பொது மக்களின் உயிரோடு விளையாடியதாகக் கூறி முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லைக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்று கொண்டுவரப்பட்ட போது, அப்போதைய ஆளும் கட்சியினர் அதனைத் தோற்கடித்தனர்.

அதை விட மிகச் சிறிய விடயமான 'கலாநிதி' சர்ச்சையில் சிக்கிக்கொண்ட முன்னாள் சபாநாயகர் அசோக்க ரனவல சட்டத்தின் படி, குற்றமிழைக்காவிட்டாலும் தேசிய மக்கள் சக்தி அவரை இராஜினாமா செய்யச் செய்தது.

தேசிய மக்கள் சக்தியின் இந்த நேர்மை நிரந்தரமானதா இல்லையா என்பது வேறு விடயமாகும். ஆனால், மக்கள் விடுதலை முன்னணி 1994ஆம் ஆண்டிலிருந்தும் தேசிய மக்கள் சக்தி அதன் ஆரம்பமான 2019ஆம் ஆண்டிலிருந்தும் தமது நேர்மையையும் அரசியல் நாகரிகத்தையும் நிரூபித்துக் காட்டியுள்ளது.

எதிர்வரும் தேர்தல்களிலும் அந்த நேர்மையோடும் அரசியல் நாகரிகத்தோடும் தான் எதிர்க் கட்சிகள் போட்டியிட வேண்டியுள்ளது. கள நிலைமையும் தமக்குச் சாதகமாக இல்லாத நிலையில், இந்த விடயம் எதிர்க்கட்சிகளுக்கு மேலும் பாரிய சவாலாகப் போகிறது.

எதிர்க் கட்சிகள் இந்நிலைமையை வெற்றிகொள்ள ஒன்றில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் திட்டங்கள் படுதோல்வியடைய வேண்டும் அல்லது எதிர்க்கட்சிகள் அரசியல் நாகரிகம் என்ற விடயத்தில் ஒரு சில வருடங்கள் பல தியாகங்களைச் செய்ய வேண்டும். இவர்கள் நேர்மையானவர்கள் என்பதை மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் நடந்து கொள்ள வேண்டும். ஆனால், நடிக்கக் கூடாது. நடப்பையும் நடிப்பையும் மக்கள் புரிந்து கொள்வார்கள்.



## வாழ்வியல் தரிசனம்

சுய நலமில்லாமல் வாழ்பவர்களைப் பலர் சுரண்ட நினைக்கின்றார்கள். உறவுகளை, உதவுபவர்களை எளிதாக ஏமாற்றுபவர்கள், தங்களை தாங்களே சிறுமைப்படுத்துகின்றனர்.

இத்தனை நடந்த பின்னரும் கூட, தாராள மனம் படைத்தோர் தங்களது நல்ல செயல்களை நிறுத்துவதும் இல்லை.

இந்த உலகில் எல்லாமே நடக்கும். பெற்றோரை மதிக்காத பிள்ளைகள், ஆசானை மறந்த மாணவர்கள், கொடுத்தவர்களுக்கே துரோகம் செய்யும் எத்தர்கள் என ஏராளமான பிரகிருதிகள் எம்மோடு வாழ்ந்தபடியே நடமாடுகின்றனர்.

சந்தோஷமாகக் கோவில் திருவிழாவை மக்கள் கொண்டாடும் போது. அங்கேயும் திருடர் கூட்டம் தங்கள் கைரிசையைக் காட்டுகின்றனர். எப்படி எச்சரிக்கை செய்தாலும் மக்கள் அதனைக் கேட்காமல் பணம், பொருள்களைத் துஷ்டர்களிடம் இழக்கின்றார்கள்.

நல்வாழ்வு கெட்டவர்களுக்குப் பிடிக்காது. குற்றச்செயல்களை தங்களின் நிரந்தர தொழிலாகக் கொண்டவர்கள், திருந்துவது இல்லை. முற்காலத்தில் அரசர்கள், திருடர்களை எத்தர்களை மன்னிப்பதில்லை. பெரும் தண்டனை வழங்குவார்கள். உலக அமைதி தீ யோர்களை களைவதில் தங்கியுள்ளது.

நன்றி–பருத்தியூர் பால.வைரவநாதன்

## கடிதங்கள்

### விவசாயிகள் கோரிக்கை

விகாராதிபதியினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமது விவசாயக் காணிகளை பெற்றுத்தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குச்சவெளி-திரியாய் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட ஆத்திக்காட்டுவெளி பகுதியில் உள்ள தமிழ் மக்களின் பாரம்பரிய விவசாயக் காணிகளில் பௌத்த பிக்கு ஒருவர் விவசாயம் மேற்கொண்டு வருவதாகவும் இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றை தமது வாழ்வாதாரத்திற்காக மீட்டுத் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஆத்திக்காடு பகுதியில் உள்ள 88 ஏக்கர் காணி பானாமுரே திலகவங்ச நாயக்க தேரர் என்ற பௌத்த பிக்கு ஒருவரின் பெயரில் தற்காலிக இடாப்பு பதிவு மேற்கொள்ளப்பட்டு கிட்டத்தட்ட 3 வருடங்களாக சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதற்காக அரசாங்கத்திடம் இருந்து 20 சிங்கள மக்களின் பெயரில் மானியப் பசளை பெற்று வருவதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில், 2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் 88 ஏக்கர் மற்றும் அதற்கு மேற்பட்ட காணிகள் அப்பகுதியில் உள்ள சப்தநாக பப்பத வன செனசுன விகாரைக்கரியது என குறிப்பிட்டு ஆக்கிரமிக்கப்பட்டு புத்த பிக்கு ஒருவரின் தலைமையின்கீழ் விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

– எஸ்.கீதபொன்கலன்


பென்னெட் ரூபசிங்க


அம்மையப்பாபிள்ளை யோகமூர்த்தி


சந்திரிக்கா விஜேசுந்தர


என்.எம்.அமீன்


ஸனிதா கரீம்

## 5 சிரேஷ்ட ஊடகவியலாளர்களுக்கு

# வாழ்நாள் சாதனையாளர் விருதுகள்

**ஊடகவியல் விருதுகள் வழங்கும் இரவு நிகழ்வின் மைல் கல்லாகவுள்ள வாழ்நாள் சாதனையாளர் விருதுகளை இந்த வருடம் 5 சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் பெற்றுக் கொண்டனர். நாட்டின் அச்சு ஊடகத்துறையில் மிகச் சிறந்ததைக் கொண்டாடும் மிகச் சிறந்த ஊடகவியல் விருதுகள் வழங்கும் 25ஆவது நிகழ்வானது கல்கிசை, மவுண்ட் லவனியா ஹோட்டலின் எம்பயர் பால்றூம் மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (07) இடம்பெற்றது.**

திறமையான, அர்ப்பணிப்புள்ள, விளைவை ஏற்படுத்திய ஊடகவியலாளர்களைக் கௌரவப்படுத்தும் கால் நூற்றாண்டு மைல்கல்லை இந்த வருடம் குறித்துள்ளது.

விருதுகள் 18 பிரிவுகளில் வழங்கப்படுவதுடன், 5 சிரேஷ்ட ஊடகவியலாளர்கள் வாழ்நாள் சாதனையாளர் விருதைப் பெறவுள்ளனர். இந்த நிகழ்ச்சியானது, இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்துடனும் அதனுடன் இணைந்த இலங்கை பத்திரிகைகள் சபை, இலங்கை சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் இலங்கை தொழில் புரியும் ஊடகவியலாளர்கள் சங்கம் ஆகியவற்றின் பங்காளித்துவத்துடன், இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வருடத்துக்கான வாழ்நாள் சாதனையாளர் விருதை அம்மையப்பாபிள்ளை யோகமூர்த்தி, என்.எம்.அமீன், சந்திரிக்கா விஜேசுந்தர, பென்னட் ரூபசிங்க மற்றும் ஸனிதா கரீம் ஆகியோர் பெற்றுள்ளனர்.

### அம்மையப்பாபிள்ளை யோகமூர்த்தி

1970களில் கொழும்பிலிருந்து வெளியாகிய பிரபல தமிழ், நகைச்சுவை சஞ்சிகையாகிய 'சிரித்திரன்' சஞ்சிகையில் 'கருத்தோவியங்கள், நகைச்சுவை துணுக் குகள், கட்டுரைகள் மற் றும் கவிதைகளை வெளியிடுவதன் மூலம் இவர் தனது ஊடகப்பணியை ஆரம்பித் திருந்தார். அத்துடன் யாழ்ப்பாணத்திலி ருந்து வெளியாகிய 'ஈழமுரசு', 'சமநிதி' மற்றும் சில பத்திரிகைகளுக்கும் ஆங்கில, சிங்கள மொழிபெயர்ப்புகளைச் செய்திருந்தார். பின்னர் இவர் 1984 ஆம் ஆண்டி லிருந்து 1995ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தில் விவசாய வர்த்தக நிறுவனம் ஒன்றில் கணக்கு இலிகிதர் பின்னர் முகாமையாளராகப் பணியாற்றினார். 1996ஆம் ஆண்டில் கொழும்புக்கு இடம்பெயர்ந்த இவர் 1996ஆம் ஆண்டில் 'வீரகேசரி' பத்திரிகைக்கு ஆங்கில், சிங்கள மொழிபெயர்புக் கட்டுரைகளை எழுதி வந்தார். பின்னர் 1997ஆம் ஆண்டு ஏப்ரலில்'தினக்குரல்' பத்திரிகை ஆரம்பித்த காலத்திலிருந்து அதில் ஆசிரியபீட கருத்தோவியராகவும் மொழிப்பெயர்ப்பாளராகவும் இன்று வரை பணியாற்றி வருகிறார்.

இவர் இதுவரையில் சுமார் 5 ஆயிரம் அரசியல் கேலிச் சித்திரங்கள் மற்றும் சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆங்கில, சிங்கள மொழிபெயர்ப்புகளை 'தினக்குரல்' பத்திரிகையிலும் 'வீரகேசரி' பத்திரிகையிலும் வெளியிட்டுள்ளார். 1970களிலிருந்து இக்கட்டான காலகட்டங்களில் அரசியல் கேலிச் சித்திரங்களை மற்றும் கட்டுரைகளை ஆக்கியுள்ளார். இவர் கேலிச் சித்திர படைப்புகளுக்காக 4 விருதுகளையும் 2 கலசப்பதக்கங்களையும் பெற்றுள்ளார்.

### சந்திரிக்கா விஜேசுந்தர

மராபன மகா வித்தியாலயம் மற்றும் இரத்தினபுரி சீவலி மகா வித்தியாலயம் என்பவற்றில் கல்வி கற்ற சந்திரிக்கா விஜேசுந்தரவின் ஊடகவியல் துறை மீதான ஆர்வம் அவரது பாடசாலை நாட்களிலேயே ஆரம்பமானது. அவர் 1978ஆம் ஆண்டு சுயாதீன பத்திரிகைகள் குழுமமான தவச பத்திரிகையில் பயிலுனராக இணைந்து கொண்டார். அங்கிருந்து அவர் றிவிரெஸ மற்றும் வார இறுதி பத்திரிகைகள் என்பவற்றில் முதலில் விவரண எழுத்தாளராகவும் பின்னர் விவரண ஆசிரியராகவும் சுமார் 12 வருடங்கள் சேவையாற்றினார். அத்துடன், அவர் தரு ரெஸ்ஸ சிறுவர்கள் அனுபந்தத்தை ஆரம்பித்தார்.

அவர் 1992ஆம் ஆண்டு லங்காதீப பத்திரிகையில் இணைந்து 1992ஆம் ஆண்டில் பிரதி ஆசிரியரானார். அதிலிருந்து 2021ஆம் ஆண்டு வரை அவர் சுமார் 30 வருட காலம் டெயிலி லங்காதீப பத்திரிகையில் விவரண ஆசிரியர் பதவி நிலையை வகித்து வாசகர்கள் மத்தியில் அந்தப் பத்திரிகை பிரபலமடைய பரந்தளவில் பங்களிப்புச் செய்தார்.

விஜேசுந்தர மூத்த ஊடகவியலாளர் ஒருவராக மட்டுமன்றி, இளம் வயது வந்தவர்களுக்கான புத்தகங்களுடன் சிறுவர்களுக்கான புத்தகங்களை எழுதியதன் மூலம் சிங்கள இலக்கியத்தின் மேம்பாட்டுக்கு பங்களிப்புச் செய்த முதுபெரும் எழுத்தாளராகவும் மொழிபெயர்ப்பாளருமாக விளங்கினார். திகிரி கதான்தர, போமது ஹேன யாலுவோ, நாம் கம் உபதா உள்ளடங்கலானவை பாடசாலைப் பாடத்திட்டத்துக்கு சிபாரிசு செய்யப்பட்ட அவரது பணிகளில் சிலவாகும். அத்துடன், அவரது புத்தகமான பஞ்சலா சஹ பன்சிலா 2024ஆம் ஆண்டு அரச இலக்கிய விருதுகள் வைபவத்தில் மிகச் சிறந்த சிறுவர் இலக்கியத்துக்கான புத்தக விருதுக்கு சிபாரிசு செய்யபட்டிருந்தது.

### நிஸமுதீன் உடையார் மொஹமட் அமீன்

தெஹிவளை, நெடிமலை பிரதேசத்தில் விஜித வீதியில், 21ஆம் இலக்க முகவரியில் வசிக்கும் நிஸமுதீன் உடையார் மொஹமட் அமீன் தனது ஆரம்பக் கல்வியை தல்கஸ்பிட்டிய முஸ்லிம் மகா வித்தியாலத்தில் பூர்த்தி செய்து பின்னர் ஹெம்மாதகம அல் அஸார் மத்திய மகா வித்தியாலத்திலும் உயர் தரக் கல்வியை மாவனெல்ல, ஸாஹிரா கல்லூரியிலும் கற்றார்.

இதனையடுத்து, 1974ஆம் ஆண்டு களனி பல்கலைக்கழகத்தில் கலை இளமாணிப் பட்டத்தை பெற்ற என்.எம்.அமீன் என சுருக்கப் பெயரால் அழைக்கப்படும் அவர் (72 வயது) ஊடகத்துறையிலான தனது அபிமானம் காரணமாக 1976ஆம் ஆண்டு லேக் ஹவுஸ் குழுமத்தில் தினமணி பத்திரிகையின் ஆசிரிய பிரிவில் ஒரு பயிற்சி ஊடகவியலாளராக தனது பணியை ஆரம்பித்தார். அங்கு அவரது பணியின் பயணம் 2007ஆம் ஆண்டு வரை தொடர்ந்தது.

அவர், தினகரன் மற்றும் ரி.கே.என். வாரம் அஞ்சலிப் பத்திரிகையில் ஊழிய நிருபராகவும் பாராளுமன்ற செய்தி ஆசிரியராகவும் அந்தக் குழுமத்தின் அனைத்து தமிழ் வெளியீடுகளுக்கும் முகாமைத்துவ ஆசிரியராகவும் 24 வருட காலம் சேவையாற்றினார்.

பின்னர் அவர் 2007ஆம் ஆண்டிலிருந்து 2019ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் பிறீ லங்கா மீடியா நிறுவனத்தில் நவமணி பத்திரிகையின் பணிப்பாளராகவும் தலைமை ஆசிரியராகவும் பணியாற்றினார்.

அவர் 1995ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஸ்தாபக பொதுச் செயலாளராக பதவிப் பொறுப்பேற்றதுடன் 1998ஆம் ஆண்டில் அதன் தலைவரானார்.

தெற்கு ஆசிய சுதந்திர ஊடக சங்கத்தின் இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளராக சேவையாற்றிய அவர், 22 வருட காலத்துக்கு மேலாக இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் உறுப்பினராகவுள்ளார்.

கொழும்பு பல்கலைக்கழகம் (ஊடகவியல் டிப்ளோமா கற்கைநெறி), இலங்கை தென் கிழக்குப் பல்கலைகழகம், இலங்கை இதழியல் கல்லூரி மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் என்பவற்றில் வருகை தரும் விரிவுரையாளராக சேவையாற்றினார்..

என்.எம்.அமீன் ஊடகத்துறையில் மட்டுமல்லாது, சமூக சேவையிலும் தன்னை இணைத்துக் கொண்ட ஒருவராகத் திகழ்கிறார். அந்த வகையில் அவர், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவராகவும் இலங்கை முஸ்லிம் பேரவையின் தலைவராகவும் உள்ளார்.

அவர் தனது சேவைக் காலத்தில் பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, ஈரான், ஜப்பான், குவைத், மாலைதீவு, நேபாளம், ஓமான், பாகிஸ்தான், கட்டார், சவூதி அரேபியா, துருக்கி மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பென்னெட் ரூபசிங்க

பென்னட் ரூபசிங்க தனது ஊடகவியல் தொழிலை 1963ஆம் ஆண்டு பத்திரிகைத் துறையில் அடையாள சின்னமொன்றாக விளங்கும் டி.பி. தனபாலவின் வழிகாட்டலின் கீழ் ஆரம்பித்தார். அடிப்படை செய்தி அறிக்கையிடலில் தேர்ச்சி பெற்ற ரூபசிங்க, விரைவில் தன தவச ஆசிரியர் குழுவில் இன்றியமையாத உறுப்பினர் ஒருவராக மாறினார். 1964ஆம் ஆண்டு அவரும் ஏனைய 9 ஊடகவியலாளர்களும் அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட செய்திப் பத்திரிகை சட்டம் தொடர்பில் தவச பத்திரிகையின் நிலைப்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அதிலிருந்து வெளியேறினர்.

பதவியை இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து ரூபசிங்க அதே வருடம் ஆத்த பத்திரிகையில் நிருபர் ஒருவராக இணைந்து கொண்டார். தொடர்ந்து 3 தசாப்த காலத்துக்கு மேலாக ஆத்த ஆசிரியரை குழுவில் குறிப்பிடத்தக்க வகிபாகத்தை அவர் வகித்தார். அக்கால கட்டத்தில் அவர் றிச்சர்ட் விஜேசிறி, பி.ஏ.சிறிவர்த்தன மற்றும் சிறிலால் கொடிகார உள்ளடங்களான பிரபல ஊடகவிலாளர்கள் சகிதம் பணியாற்றினார். அவர் தனது பங்களிப்புகளுக்காக சகாக்கள் மற்றும் பொதுமக்கள் ஆகிய இரு தரப்பினரிடமிருந்துமே பாராட்டை வென்றெடுத்தார்.

1994ஆம் ஆண்டில் ஆத்த பத்திரிகையை விட்டு விலகிய அவர், லேக் ஹவுஸ் வெளியீடுகளில் ஒன்றான தினமினவில் இணைந்து கொண்டார். அங்கு செய்தி ஆசிரியராக தனது பணியை ஆரம்பித்த அவர் பிரதி ஆசிரியர், இணை ஆசிரியர் பதவி நிலைகளுக்கு உயர்ந்ததனூடாக தினமின பத்திரிகையின் ஆசிரியாரானார்.

2002ஆம் ஆண்டில் லேக் ஹவுஸிலிருந்து வெ ளியேறிய பென்னெட் தினகரா மற்றும் பெரலிய போன்ற பத்திரிகைகளுக்கு பங்களிப்புச் செய்தார்.

பின்னர் அவர் அதனுடன் இணைந்த இணையத்தள ஊடகவியல் துறையைத் தழுவி லங்கா ஈ நியூஸ் வெப்தளத்தின் செய்தி ஆசிரியாராக சேவையாற்றினார். இலத்திரனியல் துறையில் சவால்களை எதிர்காண்ட நிலையிலும் ரூபசிங்க அனைத்தையும் எதிர்த்து நின்று தனது தொழிலை தொடர்ந்து மேற்கொண்டார்.

அவர் அடுத்து சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தால் வெளியிடப்படும் மௌபிம பத்திரிகையில் குறிப்பிடத்தக்க வகிபாகத்தை வகித்தார். அந்தப் பத்திரிகையின் ஆரம்பத்தில் இணை ஆசிரியராக இணைந்து கொண்ட ரூபசிங்க ஆசிரியர், பணிப்பாளர் மற்றும் ஆலோசகர் உள்ளடங்கலாக பல்வேறு முக்கிய பதவிகளை வகித்துள்ளார். அவர் கடந்த டிசம்பர் மாதம் ஓய்வுபெறும் வரை 13 வருடங்களை மௌபிமவுக்காக அர்ப்பணித்து 6 தசாப்தங்களுக்கு மேலான குறிப்பிடத்தக்க பணியை பூர்த்தி செய்தார்.

### ஸனிதா கரீம்

ஸனிதா கரீம் 1970களின் இறுதியிலிருந்து ஊடகவியலில் உள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தில் இளமாணிப் பட்டம் பெற்றதையடுத்து அவர் தனது ஊடகவியல் தொழிலை ஆரம்பித்தார். காலி, திரு இருதய கல்லூரியின் முன்னாள் மாணவியான அவர் சண் பத்திரிகையில் பாராளுமன்ற செய்தியாளராக தனது ஊடகவியல் தொழிலை ஆரம்பித்தார். பின்னர் உபாலி நியூஸ் குழுமத்தில் இணைந்து கொண்ட அவர், ஐலன்ட் பத்திரிகையில் 1981ஆம் ஆண்டு அது ஆரம்பமானது முதல் பணியாற்றினார். ஊடகத்துறையிலான நீண்ட கால தொழில் அனுபவத்தில் கரீம் பத்திரிகையின் நவநாகரிக மற்றும் சமூகப் பக்கங்களுக்குப் பொறுப்பாகவிருந்து அந்தப் பத்திரிகை புதிய உயரமொன்றை தொட வழிவகை செய்ததுடன், அவர் பயணம் மற்றும் சுற்றுலா போன்ற எண்ணற்ற தலைப்புகளில் எழுதியுள்ளார். கரீம் தற்போது த சண்டே ஐலன்ட் பத்திரிகையின் விவரண ஆசிரியராகவுள்ளார்.

அமெரிக்கா

### பறவை காய்ச்சல்:

# அமெரிக்காவில் முதல் மரணம் பதிவு

அமெரிக்காவில் முதன்முறையாக, பறவை காய்ச்சல் பாதிப்புக்குள்ளாகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அமெரிக்காவின் லூசியானா மாகாணத்தை சேர்ந்த 65 வயதான வயோதிபரே, இவ்வாறு பறவை காய்ச்சல் பாதிப்புக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

அதிக தொற்றும் தன்மை கொண்ட எச்5என்1 ரக வைரசின் தாக்குதலுக்கு ஆளான அவர், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

காட்டு பறவைகள் மற்றும் வளர்ப்பு பறவைகள் ஆகியவற்றுடன் தொடர்பில் இருந்ததாலேயே, அவருக்கு தொற்று ஏற்பட்டுள்ளதாக, லூசியானா சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.




இவர் தவிர, வேறு யாருக்கும் இந்த தொற்று ஏற்படவில்லை என லூசியானா சுகாதார துறை வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை அமெரிக்காவில் பறவை காய்ச்சலால் ஒரு உயிர் கூட பலியாகாத நிலையில், தற்போது முதன்முறையாக ஒரு உயிர் உயிரிழநருதிருப்பது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில், பறவை காய்ச்சல் மேலும் பரவாமல் இருக்க மேலதிக நடவடிக்கைகளை அமெரிக்க அரசு எடுத்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

நேபாளம்



### நேபாளத்தில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

## 50க்கும் மேற்பட்டோர் பலி; 38 பேர் காயம்

நேபாளத்தில், செவ்வாய்க்கிழமை (7) காலை 6.50 மணியளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலநடுக்கம், 7.1 ரிச்டர் அளவுகோலில் பதிவாகியுள்ளது.

நேபாளத்தின் லொபுசே என்ற பகுதிக்கு வடகிழக்கே 93 கிலோமீற்றர் தொலைவில் இந்நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

சீனா எல்லையருகே சன்குவசாபா மற்றும் தேபிள்ஜங் ஆகிய பகுதிகளிலும் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

இதனால் பல பகுதிகளில் கட்டிடங்கள் குலுங்கின.

இதனைத் தொடர்ந்து, இந்தியாவின் டெல்லி, பீகார் ஆகிய மாநிலங்களிலும் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

குறிப்பாக பீகாரின் முசாபர்பூர், மோதிஹாரி மற்றும் பெட்டையா மாவட்டங்களிலும் உணரப்பட்டது. அதேபோல், திபெத்தின் ஷிகத்சே நகரிலும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என, அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


அத்துடன், இமயமலையின் அடிவாரத்தில் உள்ள திபெத்தில், செவ்வாய்க்கிழமை (7) காலை, சக்தி வாய்ந்த நிலநடுக்கம் உட்பட 6 நிலநடுக்கங்கள் அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டதில் 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.
38 பேர் காயமடைந்தனர்.

அதேபோல், மேற்கு சீனாவில், 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலநடுக்கம் இந்தியா, நேபாளம் மற்றும் பூடானிலும் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது. இதன்படி, டெல்லி-என்.சி.ஆர். மற்றும் வட இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் கடுமையான அதிர்வுகள் உணரப்பட்டன.

பீகார் தலைநகர் பாட்னா, மேற்கு வங்காளம் மற்றும் அசாம் உள்ளிட்ட வடகிழக்கு மாநிலங்களிலும் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது.

கனடா



### பிரதமர் பதவியை

## துறந்தார் ஜஸ்டின் ட்ரூடோ

கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

2015ஆம் ஆண்டு முதல் 9 ஆண்டுகள் கனடா பிரதமராக ஜஸ்டின் ட்ரூடோ (வயது 53) செயற்பட்டு வந்தார். அதேபோல், லிபரல் கட்சியின் தலைவராகவும் அவர் செயற்பட்டார்.

இதனிடையே, பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் செல்வாக்கு அந்நாட்டு மக்களிடையே பெருமளவு குறைந்து வந்தது. மேலும், சொந்த கட்சிக்குள்ளும் செல்வாக்கு குறைந்தது.

கனடா பொருளாதார ரீதியில் பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்து வருகிறது.

மேலும், அமெரிக்க ஜனாதிபதியாக டிரம்ப் பொறுப்பேற்கவுள்ள நிலையில், கனடா மீது அதிகளவில் வரி விதிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், நாட்டின் பொருளாதார சூழ்நிலை, சொந்த கட்சிக்குள் கடும் எதிர்ப்பு, பொதுமக்களிடம் ஆதரவு குறைவு உட்பட பல்வேறு காரணங்களால், பிரதமர் பதவியை ஜஸ்டின் ட்ரூடோ, திங்கட்கிழமை (6) இராஜினாமா செய்தார்.

அதேபோல், லிபரல் கட்சியின் தலைவர் பதவியையும், ட்ரூடோ இராஜினாமா செய்தார்.

இதேவேளை, நாட்டின் புதிய பிரதமர் தேர்ந்தெடுக்கப்படும் வரை, இடைக்கால பிரதமராகத் தான் தொடர்ந்து செயற்படுவதாக, ட்ரூடோ அறிவித்துள்ளார்.

அசாம்

### சுரங்கத்துக்குள் வெள்ளம்:

## 15 தொழிலாளர்கள் சிக்குண்டுள்ளனர்

அசாமில் நிலக்கரி சுரங்கம் ஒன்றில் வெள்ளம் சூழ்ந்ததில், 15 தொழிலாளர்கள் சிக்கிக் கொண்டுள்ளனர்.

அசாமின் மலைப்பிரதேச மாவட்டங்களில் ஒன்றான திமா ஹசாவோவில் உள்ளடங்கிய பகுதியில் நிலக்கரி சுரங்கம் ஒன்று செயற்பட்டு வருகிறது.

இதில், வேலை செய்து வந்த தொழிலாளர்களில் 15 பேர் வெளியே வர முடியாமல் சிக்கிக்கொண்டனர்.

அவர்கள் வேலை செய்துகொண்டிருந்த போது, சுரங்கத்துக்குள் வெள்ள நீர் புகுந்துள்ளது. ஒரு சிலர் சுரங்கத்தில் இருந்து தப்பி வெளியே வந்துள்ளனர்.

தப்பி வந்த தொழிலாளர்கள், சுரங்க உரிமையாளர் மற்றும் உள்ளூர் பொலிஸாரிடம் சுரங்க விபத்து பற்றிக் கூறியுள்ளனர்.

இதனை உறுதி செய்துள்ள முதலமைச்சர் ஹிமந்த பிஸ்வா சர்மா, மீட்புப் பணியில் மாநில மற்றும் தேசிய பேரிடர் பொறுப்பு படை அதிகாரிகள் சம்பவ பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என கூறியுள்ளார்.

இராணுவ உதவியும் கோரப்பட்டுள்ளது எனவும், அவர் கூறியுள்ளார்.

இந்த சுரங்கம் நகரிலிருந்து தொலைவில், உட்பகுதியில் அமைந்துள்ளது. இதனைப் பயன்படுத்திக் கொண்டு சட்டவிரோத வகையில் சுரங்கம் செயற்பட்டு வந்துள்ளது என, அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



### இத்தாலிய சுப்பர் கிண்ணம்: இன்டரை வென்று

# சம்பியனானது ஏ.சி. மிலன்

இத்தாலிய சுப்பர் கிண்ணத் தொடரில் ஏ.சி மிலன் சம்பியனானது.

சவுதி அரேபியாவின் றியாத்தில் செவ்வாய்க்கிழமை(07) நடைபெற்ற இன்டர் மிலனுடனான இறுதிப் போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் வென்றே ஏ.சி. மிலன் சம்பியனானது.

ஏ.சி மிலன் சார்பாக தியோ ஹெர்ணாண்டஸ், கிறிஸ்டியன் புலிசிச், தம்மி ஏப்ரஹாம் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். இன்டர் மிலன் சார்பாக லொட்டரோ மார்டினெஸ், மெஹ்டி தரெமி ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இத்தாலியக் கழகங்களுக்கிடையிலான விலகல் முறையிலான கோப்பா இத்தாலியா தொடரில் இறுதிப் போட்டிக்கு முன்னேறிய அத்லாண்டாவை வென்று இறுதிப் போட்டிக்கு சீரி ஏ தொடரில் சம்பியனான இன்டர் மிலனும், கோப்பா இத்தாலியா தொடரில் சம்பியனான ஜுவென்டஸை வென்று சீரி ஏ புள்ளிகள் பட்டியலில் இரண்டாமிடம் பெற்ற ஏ.சி மிலனும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தன.

## இலங்கைச் சுற்றுப்பயணத்தை தவறவிடும் கமின்ஸ்

டெஸ்ட் போட்டிகளுக்கான அவுஸ்திரேலிய அணியின் தலைமைப் பொறுப்பை டிம் பெய்னிடமிருந்து நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் பொறுப்பெடுத்ததிலிருந்து குடும்பத்துக்கு முதலிடம் கொடுத்து தனது முதலாவது முழுச் சுற்றுப்பயணத்தை தவறவிட பற் கமின்ஸ் தயாராகியுள்ளார்.

கமின்ஸ் தனது இரண்டாவது குழந்தையை எதிர்பார்த்திருப்பதன் காரணமாகவே இலங்கைச் சுற்றுப்பயணத்தை கமின்ஸ் தவறவிடவுள்ளார்.

கடந்த ஆண்டு ஆண்டுகளில் நான்கு தடவைகள் கமின்ஸ் இல்லாதபோது தலைமை தாங்கிய ஸ்டீவன் ஸ்மித் இலங்கைச் சுற்றுப்பயணத்தின்போது அணித்தலைமைப் பொறுப்பை எடுப்பாரென எதிர்பார்க்கப்படுகிறது.



### பாகிஸ்தானுக்கெதிரான

## தொடரைக் கைப்பற்றிய தென்னாபிரிக்கா

பாகிஸ்தானுக்கெதிரான டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்கா கைப்பற்றியது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே தென்னாபிரிக்கா வென்ற நிலையில், கேப் டெளணில் வெள்ளிக்கிழமை (03) ஆரம்பித்து திங்கட்கிழமை (06) முடிவுக்கு வந்த இரண்டாவது போட்டியையும் 10 விக்கெட்டுகளால் வென்றமையைத் தொடர்ந்தே 2-0 என்ற ரீதியில் தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்கா: 615/10 (துடுப்பாட்டம்: றயான் றிக்கெல்டன் 259, தெம்பா பவுமா 106, கைல் வெரைன் 100, மார்கோ ஜன்சன் 62, கேஷவ் மஹராஜ் 40 ஓட்டங்கள். பந்துவீச்சு: மொஹமட் அப்பாஸ் 3/94, சல்மான் அக்ஹா 3/148, குராம் ஷஷாட் 2/123, மிர் ஹம்ஸா 2/127)

பாகிஸ்தான்: 194/10 (துடுப்பாட்டம்: பாபர் அஸாம் 58, மொஹமட் றிஸ்வான் 46 ஓட்டங்கள். பந்துவீச்சு: ககிஸோ றபாடா 3/55, கேஷவ் மஹராஜ் 2/14, கவெனா மபஹா 2/43, மார்கோ ஜன்சன் 1/36, வியான் முல்டர் 1/44)

பாகிஸ்தான் (பொலோ ஒன்): 478/10 (துடுப்பாட்டம்: ஷண் மசூட் 145, பாபர் அஸாம் 81, சல்மான் அக்ஹா 48, மொஹமட் றிஸ்வான் 41, ஆமிர் ஜமால் 34, கம்ரான் குலாம் 28 ஓட்டங்கள். பந்துவீச்சு: ககிஸோ றபாடா 3/115, கேஷவ் மஹராஜ் 3/137, மார்கோ ஜன்சன் 2/101, கவெனா மபஹா 1/47)

தென்னாபிரிக்கா (வெ.இ: 58 ஓட்டங்கள்): 61/0 (துடுப்பாட்டம்: டேவிட் பெடிங்ஹாம் ஆ.இ 47 ஓட்டங்கள்)

போட்டியின் நாயகன்: றயான் றிக்கெல்டன்

தொடரின் நாயகன்: மார்கோ ஜன்சன்



## வான் டிஜிக்கை நிராகரித்த றியல் மட்றிட்

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான லிவர்பூலின் அணித்தலைவரான வேர்ஜில் வான் டிஜிக்கை கைச்சாத்திடும் வாய்ப்பை ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்றிட் நிராகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

லிவர்பூலுடனான பின்களவீரரான வான் டிஜிக்குடனான ஒப்பந்தமானது நடப்புப் பருவகாலத்துடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது. மட்றிட்டை 33 வயதான வான் டிஜிக்கின் முகாமைத்துவமே அணுகியமை குறிப்பிடத்தக்கது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 08 ஜனவரி 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.